ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

ஆர்யதர்மம்.

லக்ஷ்மீஶாகிலலோகபாலக க்ருபாஸிந்தோ பவச்சாஸனா-
பிக்யானாதிஸுதர்மகல்பலதிகாம் சேத்தும் பரம் ஸாம்ப்ரதம் ।
கேசித்ஸந்தி த்ருதோத்யமா இதி ப்ருஶம் ஜானந்நபி த்வம் விபோ
கிம் மௌனம் வஹஸே ந சிந்தயஸி கிம் கீதோதிதம் ஸ்வம் வச: ॥
உபபத்ராதிப: ।

ஸகல ஜனங்களையும் அவரவர்களுக்குற்ற தர்மங்களிலிருந்தும் மாறாமல் பாதுகாப்பவரும் கருணைக்கடலாயும் விளங்கும் ஹே லக்ஷ்மீநாத! உங்களுடைய ஆக்ஞை என்று பிரஸித்தி பெற்றிருப்பதும் அநாதிகாலம் தொடங்கி உலகில் நடைபெற்றுவரும் தர்மமென்கிற சிறந்த கற்பகத்தருவை தற்காலத்திலுள்ள சிலர் வேருடன் களைந்து வெட்டி விடவேண்டுமென்று மிகவும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தாங்களும் நன்றாயறிந்தும் இவ்விதம் மௌனமாக இருக்கலாமா?

யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத ।
அப்யுத்தானமதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம் ॥

எந்தெந்த ஸமயத்தில் உலகில் தர்மத்திற்கு அற்பம் குறைவும் அதர்மத்திற்கு வளர்ச்சியுமேற்படுகின்றதோ அந்தந்த ஸமயத்தில் நான் அவதரிக்கிறேன் என்றும்

தர்மஸம்ஸ்தாபனார்தாய ஸம்பவாமி யுகே யுகே ।

தர்மத்தை நன்கு ஸ்தாபனம் செய்ய வேண்டி ஒவ்வொரு யுகத்திலும் நான் அவதாரம் செய்கிறேன் என்றும் கீதையில் உம்மால் கூறப்பட்ட வசனத்தை நீர் இப்பொழுது மறந்து விட்டீரா?

இந்த ஸமயம் ஸநாதன தர்மத்தைக் கெடுக்கச் சிலர் முன் வந்திருப்பதால் சீக்கிரமாக நீர் அவதாரம் செய்து தர்மானுஷ்டானங்களை நன்கு ஸ்தாபனம் செய்து நீர் செய்திருக்கும் பிரதிக்ஞையையும் பூர்த்தி செய்ய வேண்டுமென்று பகவானிடம் ஒரு பக்தர் பிரார்த்திக்கிறார்.

உபபத்திராதிபர்.

சுபம்.

ஆத்மாநாத்ம விவேகம்.

(உகஉ-வது பக்கத்தொடர்ச்சி)

ஆகையால் அக்ஞானத்தால் அவிவேகம்உண்டாகின்றது அவிவேகத்தால அபிமானமும் அபிமானத்தால்ராகம்துவேஷம்முதலியவைகளும். ராகாதிகளால் கர்மாக்களும், கர்ம்மாக்களால் சரீரபரிக்கிரஹமும், சரீரபரிககிரகத்தால் துக்கமும்,முறையே ஏற்படுகின்றது.

சிஷ்—இவ்விதமுண்டாகும் துக்கத்திற்கு எப்பொழுது நிவிருத்தியேற்படும்.

குரு—பாஞ்சபௌதிகமான இச்சரீர பரிக்கிரகத்திற்கு முற்றிலும் நாசம் எப்பொழுது வருகின்றதோ அவ்வமயம் துக்க நிவிருத்தியும் ஏற்படும்.

சிஷ்—முற்றிலும் நாசம் என்று எதிற்காக கூறவேண்டும்.

குரு—ஸுஷுப்தி அவஸ்தையில் துக்கமில்லாமலிருந்தாலும் விழித்துக்கொண்டபிறகு மறுபடியும்முன்போல் துக்கமுண்டாகிறது. ஆகையால்ஸுஷுப்திகாலத்தில்வாஸநாரூபமாயிருந்துகொண்டு மறுபடியுமுண்டாகிறபடியால் அவ்வித வாஸனைகூட இல்லாமல் பூராவாக நாசத்தையடையவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

சிஷ்—இவ்விதம் துக்கத்திற்குக் காரணமான சரீரபரிக்கிரகம் பூராவும் எப்பொழுது நிவிருத்தியடையும்.

குரு—அற்பம்கூட மிச்சமின்றி ஸகல கர்மாக்களும் நிவிருத்தியடையும்பொழுது தான்.

சிஷ்—கர்ம்மாக்கள் எப்பொழுது விலகும்.

குரு—ராகத்வேஷாதிகள் வாஸநா சேஷமாகக்கூட இல்லாமல் முற்றிலும் நாசத்தையடையுங்காலத்தில் விலகும்.

சிஷ்—ராகாதிகளின் நிவிருத்தி எப்பொழுதுண்டாகும்.

குரு—இதற்குக்காரணமான அபிமானம் பூராவும் விலகும்பொழுது உண்டாகும்.

சிஷ்—அபிமானம் முற்றிலும் எப்பொழுது நிவர்த்தியடையும்.

குரு—அவிவேகம்விலகும் காலத்தில்.

சிஷ்—அவிவேகம் எப்பொழுது நிவிருத்திக்கும்.

குரு—அக்ஞானத்தின் நிவிருத்தியுண்டாகும்ஸமயத்தில்.

சிஷ்—எப்பொழுது அக்ஞான நாசம்ஏற்படும்.

குரு—திருடமான பிர்மாத்ம ஞானம் ஏற்பட்டால் பாக்கியில்லாமல்ஸகலஅக்ஞானங்களும் அடியோடு விலகிவிடும்.

சிஷ்—ஆசங்கை சாஸ்திரங்களில் நித்யகர்ம்மாக்களாகச் சிலவைகளைக்கூறி அவைகளை அவச்யம் அநுஷ்டிக்கவேண்டுமென்று விதித்திருப்பதால் அக்கர்ம்மாக்களை அநுஷ்டிப்பதால் அவித்யாநிவிருத்தி தானாக ஏற்படுகின்றது. இதற்காகஞானத்தை ஏன் அபேக்ஷிக்கவேண்டும்?

குரு—இவ்வாசங்கை சரியல்ல, கர்மாநுஷ்டானம் முதலியவைகளால் அவித்யா நிவிருத்தி ஏற்படாது.

சிஷ்—ஏன் ஏற்படாது.

குரு—கர்ம்மா ஞானம் இவ்விரண்டிற்கும் விரோதமுண்டு ஆகையால் ஞானத்தினால்தான் அக்ஞானம் விலகவேண்டும்.

சிஷ்—அக்ஞானத்தை நிவிருத்திக்கும் சக்திவாய்ந்த அந்த ஞானத்தைப் பெறுவது எப்படி?

குரு—விசாரத்தால்தான் பெறவேண்டும். அதாவது ஆத்மா அநாத்மா இவைகளின் பகுத்தறிவை நன்குபுகட்டக்கூடியவிஷய விசாரத்தால் ஆத்மஞானத்தைப்பெறவேண்டும்.

சிஷ்—இவ்வித விசாரத்திற்கு யார் யார் அதிகாரி.

குரு—நான்கு ஸாதனங்களுடன் கூடியவன் அதிகாரியாவன்.

சிஷ்—நான்கு ஸாதனங்கள் எவை எவை.

குரு—நித்யாநித்யவஸ்து விவேகம். 1 இவ்வுலகிலும் பரலோகங்களிலுமுள்ள போகங்களில் வெறுப்பு. (2) சமாதிஷட்கஸம்பத்தி (3) மோக்ஷத்தை யடையவேண்டுமென்கிற விருப்பம். (4) இவையாகும்.

சிஷ்—நித்யவஸ்து விவேகமென்றால் என்ன?

குரு—பிர்மம்ஸத்யம் ஜகத் மித்யைதான் என்கிற நிச்சயஞானம்

சிஷ்—இவ்வுலகபோகங்கள் எவை.

குரு—நம் சரீரத்தைத்தவிர மாலை, சந்தனம், ஸ்திரீ, பொருள், பூமி, வீடு முதலிய ஸகலவஸ்துக்களையும் அனுபவிப்பதேயாகும்

சிஷ்—பரலோக போகங்கள் எவை.

குரு—ஸ்வர்க்கலோகம் முதல்கொண்டு பிருமலோகம் வரையிலுள்ள லோகங்களிலுள்ள போகங்களாகும்.

சிஷ்—சமாதிஷட்கமென்றால் என்ன?

குரு—சமம், தமம், உபரதி, திதிக்ஷை, ஸமாதானம், சிரத்தை, இவைகளே.

சிஷ்—சமமென்றால் யாது.

குரு—அந்தரிந்திரியமென்று கூறப்பட்டமனத்தை அடக்குதல் அதாவது ஆத்ம ஸ்வரூப விஷயமான சிரவணம் மனனம், நிதித்யாஸநம், முதலிய கார்யங்களைத்தவிர வேறு விஷயங்களில் பற்றுதலில்லாமல் செய்வதாகும்.

சிஷ்—சிரவணமென்றால் என்ன.

குரு—சாஸ்திரங்களில் கூறப்பட்ட ஆறுவிதலிங்கங்களால் சகல வேதாந்த சாஸ்திரங்களுக்கும் இரண்டாவதற்றபரமாத்மவஸ்துவில்தான் கருத்தென்று தீர்மானிப்பதாகும்.

சிஷ்—ஆறுவிதலிங்கங்கள் எவை.

குரு—உபக்ரமம், உபஸம்ஹாரம், அப்யாஸம், பலம், அபூர்வதை, அர்த்தவாதம், உபபத்தி, என்று பெயர்பூண்ட இவைகளே ஆறுவிதலிங்கங்கள். (தொடரும்)

உபபத்திராதிபர்.

2-67

பொன்மலையில் பிரம்மஸ்ரீ போலகம் சுந்திரசாஸ்திரிகள் அவர்களால் 17—3—27 ல் செய்யப்பட்ட பகவத்கீதா உபந்நியாஸத்தின் சுருக்கம்.

7-வது அத்தியாயம்.

(உஉசு-வது பக்கத்தொடர்ச்சி)

உலகத்திலுள்ள ஸகல ஜீவராசிகளிலும் மனுஷ்ய ஜன்மம் மிகவும் உத்கிருஷ்டமானது. ஏனெனில் இந்த மனுஷ்ய ஜன்மத்திற்குத் தான் தர்மாதர்ம விவேகம், ஆத்மஞான விசாரம் ஈச்வரன் உண்டு இல்லை என்பது ஆகிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் சக்தி வாய்ந்திருக்கிறது. மற்றுமுள்ள ஜீவராசிகளுக்கோவென்றால் எதேச்சையாகக் கவலையில்லாமல் எங்கும் திரிகிறதும், தூங்குகிறதும் கண்டதையெல்லாம் உண்ணுகிறதுமாகிற அற்ப சௌகர்யங்கள் இருக்கிறதேயல்லாமல் மேற்கண்ட மனுஷ்ய ஜன்மாவிற்கு ஏற்பட்டிருக்கும் ஞான சாதகமான ஸௌகர்யங்கள் யாதொன்றும் கிடையாது. ஆனதுபற்றி மனுஷ்ய ஜன்மாவானது ஸகல ஜீவராசிகளிலும் உத்கிருஷ்டமானதென்பதில் சந்தேகமேயில்லை.

அவ்விதமானிட ஜன்மாவானது உலகில் மிகவும் சொல்பமாக இருக்கிறது. மற்றைய ஜீவராசிகளோவென்றால் ஒன்றுக்கு லக்ஷத்திற்கும் அதிகமாக இருக்கிறது. இப்படி ஜீவராசிகளுக்குள் பசு, பக்ஷி, ஈ, கொசு, ஸ்தாவரம் முதலிய ஜன்மாக்களின் தொகை விருத்தியானதற்குக் காரணம் உலகத்தில் புண்ணியத்தின் குறைவும், பாபத்தின் விருத்தியுமென்றே ஒப்புக்கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. சாஸ்திரங்களும் அப்படியே கூறுகின்றன. ஆகையால் புண்ணியத்தின் பலனாகவும் (ஏற்படக் கூடிய) ஞான தர்மங்களுக்குச்சாதனமாயும் இருக்கும் இந்த மனுஷ்யஜன்மாவானதுமிகவும் அரிதென்றுநிச்சயிக்கப்படுகிறது. இந்தமனிதர்களில் அநேக ஆயிரங்களில் ஒருவன்தான் ஞானமடையும் பொருட்டு பிரயத்தினம் செய்கிறான். அப்படிப்பட்டவர்களில் ஆயிரத்தில் ஒருவனே ஞானியாயும், அந்த ஆயிரம் ஞானிகளில் ஒருவனே என்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை அறிகிறான். அப்படிப்பட்ட மிகவும் உயர்ந்ததான தத்துவத்தைச் சொல்லுகிறேன்.

ஸ்தூலமான துருவ நக்ஷத்திரத்தைக் காட்ட வேண்டுமென்றாலே மற்ற நக்ஷத்திரங்களை சுட்டிக்காட்டி துருவ நக்ஷத்திரம்

என்றும் பிறகு அவைகள் அல்ல அவைகளுக்குப் பக்கத்தில் உள்ள சிறிய நக்ஷத்திரந்தான் துருவ நக்ஷத்திரம் என்று காண்பிக்க வேண்டியிருக்கிறது. இதைத்தான் "ஸ்தூலாருந்ததி" நியாயம் என்று சாஸ்திரங்களில் வ்யகரிப்பார்கள். அப்படியிருக்க வாக்கு மனதுக்கு எட்டாததான பரப்பிரம்மத்தை நேரில் சுட்டிக் காட்ட முடியாது. ஆகையால் "அத்யாரோப அபவாத நியாயத்தை" முன்னிட்டு ஆத்ம தத்வம் நிரூபிக்கப்படுகின்றது.

என்னுடைய பிரகிருதியானது பூமி, ஜலம், அக்னி, காற்று, ஆகாயம், மனது, புத்தி, அகங்காரம் இப்படி எட்டு விதமாகப் பிரிந்திருக்கிறது. இவைகள் எல்லாம் ஜடமாயும் தாழ்ந்ததுமானவைகளே. ஜீவர்களினுடைய புண்ணிய பாபத்திற்குத்தக்கபடியும் அவரவர்களின் அனுபவத்திற்காகவும சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற இந்த ஜடப்பிரபஞ்சத்தைக் காட்டிலும் ஜீவஸ்வரூபமும் பிராணனை தரிக்கிறதற்கு ஹேதுவானதும் என்னுடைய அம்சபூதமானதுமான பிரகிருதியே அதாவது ஜீவனே சிரேஷ்டமானது. இப்படிப்பட்ட ஸகலமான பூதங்களும் இவ்விருவகைப்பிரகிருதியினாலேயே உண்டானவைகளாகத் தெரிந்து கொள். இந்த ஜகத்திற்கு உற்பத்தி காரணமும் லயத்திற்குக் காரணமும் நானே. (இதனால் உபாதான காரணமும் நிமித்த காரணமும் தானே என்றும் நிரூபிக்கிறார்) என்னை விட சிரேஷ்டமானதும் வேறு வஸ்து ஒன்றும் கிடையாது. இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவுக்கும் சொந்தமான நாமரூபங்கள் தோன்றுவதுடன் ஸத் என்றும் பிரகாசிக்கிறது என்றும் தனக்கு இது பிரியமானதென்றும் ஆகிய இம்மூன்று அம்சங்களும் நம்மால் அறியப்படுகின்றன. அந்த அம்சங்களே பிரம்மரூபம். எப்படி பல மணிகளுக்குள் ஒரே நூல் பிரவேசித்திருக்கின்றதோ அப்படியே என்னுடைய ஸ்வரூபத்தில் ஜகத் கோர்க்கப்பட்டிருக்கிறது.

ஸூத்ரே ம‍ணிகணா இவ என்னும் பதத்திற்கு இரண்ய கர்ப்பன் என்று ஓர் அர்த்தம் சொல்லக்கூடும். ஸ்வப்னவஸ்தையில் ஜீவனை தைஜஸன் என்று சொல்லுகிறது. மாண்டுக்யாதி உபநிஷத்துகள் தைஜஸனையும் ஹிரண்யகர்ப்பனையும் ஒன்றாகக் கூறுகின்றன ஆகவே ஸூத்ரே ம‍ணிகணா இவ என்னும் பதம் ஸ்வப்னவஸ்தையில் உள்ள ஜீவனைக் குறிக்கிறது. அவனிடம் எவ்விதம் ரத்னம் முதலிய வஸ்

துக்கள் ஸ்வப்னத்தில் கல்ப்பிக்கப்படுகின்றனவோ அவ்விதமே என்னிடத்தில் ஜகத் கல்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

(இந்த திருஷ்டாந்தத்தால் பரமாத்மஸ்வரூபத்திற்கு உலகத்தைக் குறித்து "விவர்த்தோபாதானத்வம்" என்னும் அத்வைத ஸித்தாந்தம் வெளியிடப்பட்டதாகிறது. இதை க்ரஹிக்கிறது சிரமமானபடியாலும் எல்லாரும் சுலபமாய் அறியும்படியும் ஸ்ரீபகவான் தன்னுடைய விபூதியம்சங்களைச் சுருக்கிச் சொல்லுகிறார்.) ஜலத்தில் இருக்கும் மதுர ரஸம், சூர்ய சந்திரர்களின் பிரபை ஸகல வேதங்களிலும் வியாபித்துக்கொண்டிருக்கும் ஓங்காரம், ஆகாயத்திலுள்ள சப்தம் மனிதர்களிடத்திலிருக்கும் பௌருஷம் (அதாவது ஸத்கார்யங்களில் முயற்சிக்கும் குணம்) ஆகிய இவைகள் நானே என்று த்யானம் செய். பூமியிலுள்ள நல்ல வாஸனையும் அக்னியிலுள்ள உஷ்ணமும், பிராணிகளின் ஆயுளும், தபஸ் செய்கிறவர்களின் துவந்துவங்களை சகிக்கிறதென்னும் சக்தியும் பகவத்ஸ்வரூபம் என்று அறி. நித்யனான என்னை ஸகல பூதங்களுக்கும் விதையாகவும், புத்திசாலிகளின் நிச்சய ஞானமும், தேஜஸ்விகளின் பராக்ரமமும் என்னுடைய ஸ்வரூபம் என்று அறி. அடையப்படாத வஸ்துக்களை அடையவேண்டுமென்ற ஆசையினால் முயற்சி செய்வது, தான் அபேக்ஷித்து அடைந்த வஸ்துக்களைப் பிரியத்துடன் இரக்ஷிப்பது ஆகிய பலத்தைத் தவிர வேறு அதாவது தர்மானுஷ்டானத்திற்கு உபயோகமுள்ள பலமும், தர்மத்திற்கு விரோதமில்லாத தேகஸம்ரக்ஷணார்த்தம் இருக்கும் அன்னபானாதிகளின் இச்சையும் பகவத்ஸ்வரூபம் என்று அறி. ஸாத்விக, ராஜஸ, தாமஸ குணங்களாலுண்டான வஸ்துக்கள் என்னுடைய ஸ்வரூபம். அவைகள் என்னால் செய்யப்பட்டு என்னிடத்தில் என் வசமாகவே இருக்கின்றனவேயன்றி நான் அவைகளின் வசப்பட்டவனல்ல.

இவ்வளவு சுலபமாய் தியானம் செய்யும் வழிகள் இருக்கும் பொழுது என் என்னை ஜனங்கள் ஸ்மரிக்கிறதேயில்லையெனில் ஸத்வ, ரஜஸ், தமோகுணங்களாகிற இந்த ராகத்வேஷ சோக மோகாதிகளினால் சகலப் பிராணிகளும் இவைகளைக் காட்டிலும் அதிகமாயும், வேறாயும் நாசமற்றும் இருக்கிற என்னை அறிகிறதில்லை.

வி. என். ராமநாதன்.

270

நான்காவது பாகம்.

விஷ்ணுவின் ப்ரத்யக்ஷம்.

இவ்விதம பிரும்மாவின அனுக்கிரஹமும், பிராம்மணர்களின் ஆசீர்வாதமும் பெற்று, திருமாலை உள்ளத்தில் தியானிக்கும் ஆதிராஜனுக்குமுன், ஸ்ரீநாராயணர், சங்கு, சக்கரம், கதை, நந்தகம் இவைகளை நான்கு புயங்களில் தரித்தது கருடவாஹனரூடராய் பிரத்யக்ஷதர்சனமளித்தார். 'அப்போது அமைந்துள்ளசிறப்பை யார்தான் வர்ணிக்கமுடியும்' வானவர்கள் சித்தர்கள் முதலிய யாவரும் "ஜெய விஜயீ பவ" என்று கோஷித்தனர். காயகர்களான கந்தர்வர்கள் திவ்ய ஸ்வரங்களுடன் கானஞ்செய்தனர். ரம்பைமுதலிய தேவதாஸிகள் பாதசாஸ்திரப்படி ஆடினர். ஸனந்தனர் முதலிய பார்ஷதர்கள் பக்கத்தில் நின்று ஸேவித்தனர். கபிலர் முதலிய யோகிகள் ஆனந்தபாஷ்ப வியாஜத்தால் பக்திரஸத்தைப் பெருகவிட்டனர். நாரதர்முதலான தேவரிஷிகள் வீணைமுதலான திவ்ய வாத்யங்களுடன் கீர்த்தனஞ்செய்தனர். பகவானுடைய விசாலமானமார்பில் அணியப்பெற்ற கௌஸ்துப ரத்தினத்தில் ஸகல உலகங்களும் பிரதிபலித்தன. கமலையும் பகவானை அணைத்து மந்தஹாஸத்துடனே தோன்றினர்.

பகவானுடைய வசனம்.

உடனே வைந்யன் பேரானந்தமடைந்து, ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து வணங்கி கைகூப்பிக்கொண்டு, துதிக்கயத்தனிக்கையில் ஆனந்தபாஷ்பம் பெருகி வார்த்தைசொல்லமுடியாமல் கண்டம் அடைக்கவே, பகவான கிருபைகூர்ந்து புத்திமதி கூறலானார் ஓய்! பிரதாபசாலியான ஆதிராஜனே' சதுர்முகனுடைய கட்டளைப்படி தேவராஜனிடம் மித்திரனாயிருப்பது மிகக்கொண்டாடத்தக்கது. யக்ஞத்திற்கு இடையூறு விளைவித்த இந்திரனும் உனது சினேகத்தைப் பெற்றதும் போற்றத்தக்கதே. "புத்திமான்கள் சகலப்பிராணிகளுக்கும் கனவிலும் த்ரோகம் நினையார்கள்." அவர்களுக்குத் தமது சரீரத்தில் ஆத்மா என்ற அபிமானமே கிடையாது. அவ்வபிமானம் உள்ளவரையிலும் பெண்ணாசை மண்ணாசை பொன்னாசை என்ற இம்மூன்றிலிருந்து, விடு

வித்துக்கொள்வதற்கு பண்டிதர்களாலும் முடியாது. அவித்தை எனப்படும் அஞ்ஞானத்தால் காமம் ஏற்படுகிறது என்று அறிந்த உன்போன்ற யோகிகள் சரீராபிமானத்தைப் பின்பற்றமாட்டார்கள். எவனொருவன் சிரத்தை பக்தி இவைகளுடன் நிஷ்காமனுயிருந்து, ஸ்வதர்மத்தால் என்னை ஆராதிக்கிறனே, அவன்மனது தெளிவு பெறுகிறது. அதனுல் பந்தங்களைவிட்டு, நல்லறிவைப் பெற்று சாந்திகுணத்தைப் பெறுகிறன். ஆகையால் நீயும் சுகதுக்கங்களைச் சமமாகப்பாவித்துப் புலன்களை அடக்கி என்னிடம் மனதைச்செலுத்தி லோகஸங்கிரஹத்துக்கு மட்டிலும் உலகமாளுவதில் விழித்தவனுயிரு.

பிரஜாபாலனம்

பிரஜாபாலனமென்பது துஷ்டர்களைத் தண்டித்து சிஷ்டர்களை ரக்ஷிப்பது என்று சொல்லப்படும். இத்தகைய பிரஜாபாலனந்தான் வேந்தனுக்கு மேன்மையைப் பயக்கும். தவம் முதலானதைக்காட்டிலும் பிரஜாபாலனமே மேம்பட்டதாகும். மற்றப் பிரஜைகளிடமிருந்து, ஆறிலொருபங்கு கடமையைப் பெறுவது போல் தபசிகளிட மிருந்து ஆயாஸமின்றியே ஆறிலொரு பங்கு புண்ணியத்தைப் பெற்று விண்ணுலகத்திற்கும் நல்வழியை அரசன் பெறுகிறன். குடிகளிடம் ஆறிலொரு பங்கு பெற்று அக்குடிகளை நீதிப்படி பாதுகாக்காத மன்னவன் அக்குடிகளின் பாபங்களையே புசிக்கிறன் என்று மனு நீதி கூறுகிறது. ஆகையால் கசடறக்கற்றறிந்த வேதியர்களின் வாயிலாய் தர்மங்களை மேன்மேலுணர்ந்து, பொருளையும் காமத்தையும் தள்ளமுடியாததால் பற்றில்லாமலே அனுமோதித்து, அன்புள்ள குடிகளால் கொண்டாடப்படும்படி பூமியைப் பாலனஞ்செய். அப்போது கிரமமாய் உனக்கு மனதின் பக்வம் நேர்ந்தபோது ஸநகாதிகளான இந்த மஹான்கள் தானகவே உனது கிருஹத்தில் தோன்றி, உன்னை அனுக்கிரஹிக்கப் போகிறர்கள்.

வரனை விரும்பாமை.

"ஓய் குழந்தாய்" உனது சம தமாதி நற்குணங்களுக்கு ஈடுபட்ட யான், நீ விரும்பும் வரனை அளிக்கிறேன் என்று நான்கு புயங்களால் ஸ்ரீகாந்தன் வைன்யனைத் தழுவிக்கொள்ளவே அம்

மஹாராஜன் பேரானந்தக்கடலில் மூழ்கி பகவானுடைய திருவடிகளில் ஸாஷ்டாங்கமாய்ப் பணிந்தான். ஆனந்த பாஷ்பஞ் சொரிந்தான். உள்ளும்புறமும் பகவானையே கண்டான். பிறகு ஒருவாறு கண்ணீரையடக்கி "புருஷோத்தமரே" வரனைக் கொடுத்து என்னை ஏமாற்றல் கூடாது. வரன்களைப்பெற்று புண்ய லோகங்களைச் சேரும் தேஹாபிமானிகளும், புண்ணியங் குறைந்ததும், மானிட லோகத்தையே அடைகிறார்கள் என்று கூறப்பட்டிருப்பதால், அவைகளும் முடிவில் நாரகிகள அனுபவிக்கும் லோகங்களுக்கே சமமாகின்றன. மோக்ஷத்தையே வரனாகக் கேள் என்றால அது வும் எனக்குத் தேவையில்லை. பெரியோர்களின் உள்ளத்தினின்று உத்தமாங்கத்தின் வழியாய் தடங்கலின்றிப் பெருகும் தமது சரணாரவிந்தமகரந்தப்ரவாகத்தைப் பானஞ்செய்வதைக் காட்டிலும் வேறொன்றையும் நான் பொருட்படுத்தவில்லை.

பகவத் கதாரஸம்.

ஆனால் என் மனமானது, பகவத் குணங்களைக் கேட்பதிலும், பகவத் ரூபங்களைப் பார்ப்பதிலும், கருத்துள்ளதாயிருக்கிறபடியால், ஆயிரம்தலைகள்படைத்த ஆதிசேஷனைச் சிலாகிக்கிறது. பகவத்கதையின் ரஸத்தை அனுபவிப்பதே மோக்ஷத்தைக்காட்டிலும் மேலானது. பாகவதர்களின் முகாரவிந்தங்களிலிருந்து, பெருகும் மகரந்தத்தின் பிரவாகத்தை வஹிக்கும் வாயு பகவானுடைய ஸ்பர்சத்தைப் பெற்ற அற்ப யோகிகளும் ஆன்மஞ்ஞானம் பெற்று, ராகாதிகளான தீயகுணங்களையுமொழித்துச் சுகம் பெறுகிறார்கள்.

பக்தி.

"ஓய் மங்கள நிதியே" பக்தியே சகலப் பேரானந்தத்திற்கும் நிலையாயுள்ளது. ஜன்மாந்திரத்தில் செய்த தவத்தின் பயனால் ஸாது ஸங்கம் பெற்ற ஸத்குணமுள்ள எப்புருஷனும், தங்கள் குணங்களைச் செவியால் பானஞ் செய்வதிலிருந்து திருப்தியாய் விட்டது போதுமென்று உபரதியை அடைவான். பாலகிருஷ்ணனான உமது வேணுகானத்தைக் கேட்ட பசுக்களும், வாயிலுள்ள புற்களையும் கக்கிவிட்டு, பகவன் மயமாய் இருந்து பேரானந்தக் கடலில் மூழ்கின்றன. சந்திரனுக்குடன் பிறவியான மஹாலக்ஷ்மியும். தங்களுடைய கீர்த்தியைக்கேட்டு, மகிழ்ந்து, மற்ற தேவர்

களைப் பொருட்படுத்தாமல் ப்ரேமையுடன் தங்களையே வரித்தாள் "பிரபுவே" நான், அற்பனுயிருந்தபோதிலும், மஹாலக்ஷ்மியைப்போல், குணநிதியும், கருணைக்கடலுமான தங்களையே சரணமடைகிறேன்.

கே. வி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்'

(இன்னும் வரும்)

ஸ்ரீமதாசாரிய பாலலீலை.

சென்னையிலுள்ள (ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடத்திற்கு அதீனமான) ஸ்ரீ சங்கராசாரிய ஸ்ரீமடத்தில் ப்ரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய வெங்கிடசுப்பாசாஸ்திரிகள் அவர்கள். கொடவாசல்: ப்ரம்மஸ்ரீ நரசிம்மாசாரிஸ்வாமிகள். ப்ரம்மஸ்ரீ சேங்காலிபுரம்வைத்ய நாததீக்ஷிதரவர்கள். கடலங்குடி ப்ரம்மஸ்ரீ நடேச சாஸ்திரிசள். ப்ரம்மஸ்ரீ வெங்கந்தூர் ப்ரஸங்கவர ஸோமதேவ சர்மா அவர்களும் சென்ற ஒரு வாரமாக அத்வைத உபன்யாஸத்தை வெகு அழகாகச் செய்து வருகின்றனர். இதில் எனது ஆசாரியரும் அமரகலாவிலாஸனீ ஸபையின் ஆசாரியருமான ப்ரம்மஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா அவர்கள் அகில ஜனங்களுக்கும் புரியுமாறு செய்த உபன்யாஸத்தின் சுருக்கம்.

இவ்வவனியின் கண், பற்பல மதங்கள் தோன்றி நாஸ்திகம் மேலோங்கி ஆஸ்திகம் கீழோங்கியிருக்கும்போது இந்திராதிதேவர்களின் ப்ரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீ சங்கரர் சிவபக்த சிரோமணியான சிவ குருவின் தவப்பயனைக் காலடியில் ஆரியாம்பிகையினிடம் அவதரித்தார், அச்சங்கராது சரிதத்தைப்பலர் பலவகையாக வர்ணித்துளர். அச்சங்கருடைய சரிதத்தின் உள் நோக்கம் ஒன்றே. அதாவது அத்வைத ஆனந்தத்தைப் புகட்டுவதேயாகும். ஆயினும் அச்சரிதம் கேட்பவர்களின் சித்த பரிபாகத்திற்கேற்றபடியே பொருளளிக்கும் என்று உபன்யஸித்துப்பிறகு ச்ரவண மனன நிதித்யாஸனங்களை வெகு அழகாகப் புரியும்படி எடுத்துரைத்து அவைகளில் ச்ரவணம் அத்யாவச்யமென்று உரைத்துப் பின்னர் அச்சங்கராதுபாலலீலைகளில் சிலவற்றை எடுத்துபன்யஸித்தார். சங்கரர் ஜனித்ததும் சிவகுரு அக்குழந்தைக்கு

ஜாதகர்மத்தை விதிவத்தாகச் செய்து பிறகு நாமகரணம் செய்ய முயன்று எப்பெயர் வைப்பது என்று எண்ணிக்கொண்டிருக்கும் ஸமயத்தில் அக்குழவியை ஐந்து தலை நாகம் சுற்றியிருப்பதைக் கண்டு நடுங்கி தண்டமொன்றைக் கரத்திலேந்தி அந்நாகத்திற்கருகில் செல்ல அந்நாகம் உடனே உருத்ராக்ஷமாலையாக மாறியதைக்கண்டு இக்குழவி அமானுஷமானதென எண்ணி நாகத்தைப்பூஷணமாக உடையவர் சங்கரரான படியால் இக்குழந்தைக்கு சங்கரர் என்றே பெயர் வைத்தார்.

பிறகு அக்குழந்தை "தான் ஈச்வராவதாரம். அவ்வீச்வரர் ஸர்வாந்தர்யாமி என்பதையும் அகில ஜனங்களுக்கும் உணர்த்துவதற்காக தாய்த்தந்தைகள் சூழ்ந்துகொண்டிருக்கும்பொழுது மறைந்துவிட உடனே குழந்தையைக் காணாது தாய்தந்தைகள் அங்குமிங்கும் தேட அவ்வீட்டில் ஓரிடத்திலுள்ள கூச்மாண்டம் (பூசனிக்காய்) அதிலிருந்து வெளிவருவதைக் கண்டு இக்குழந்தை ஈசுவர அவதாரமென்றே எண்ணி அதனிடம் மிகப்பணிவுடன் வணங்கித் தொட்டிலில் விட்டுத்தாலாட்டுவதற்காக ஆர்யாம்பிகையை அங்கு விட்டு சிவகுரு சிவ பூஜை செய்ய அச்சமயத்தில் சிவபெருமான் பேரில் தான் போடும் புஷ்பமனைத்தும் அங்கு விழாதிருந்ததைக் கண்டு கவலையுடனிருக்க ஆர்யாம்பிகை ஓடிவந்து அப்புஷ்பங்களனைத்தும் குழந்தையின் மீது இருக்கிறதென்று சொல்ல அதனைக்கண்டு மிகஆநந்தமடைந்து வாரி எடுத்து அக்குழவியைக் கண்களில் ஒத்திக் கொண்டு மிகச் சந்தோஷமடைந்தார். சிலநாள் சென்ற பிறகு குழந்தை தவிழ்ந்து போகும்போது ஸநகாதி மகரிஷிகளும் வேதங்களும் உருவமெடுத்துப் பின் தொடர்ந்தன. மற்றொரு ஸமயம் தவிழ்ந்துக் கொண்டே அண்டை வீட்டிற்குச் சென்று உரியிலுள்ள வெண்ணெயை எடுக்க மேலிருந்த பாண்டத்தை எடுத்துடைத்து இரண்டாவது பாண்டத்தில் காத்தை விடும்பொழுது அவ்வீட்டிற்காரி வந்து யார் நீ எதற்காக வெண்ணெயைத் திருடுகிறாய் என்று கேட்க அப்பொழுது நான் வெண்ணெயைத் திருடவந்தவனில்லை. ஆன்மஸ்வரூபத்தை விளக்க இச்செய்கையைச் செய்து மேல்பாண்டத்திற்கொப்பானது இவ்வுடல். நாடிகள் உரி ஹிருதய கமலந்தான் அமிருதமிருக்குமிடம் அதுதான். ஆனந்தவடிவமான பரம்பொருள் என்று அக்குழந்தை சொல்வதைக்கேட்டு மிகப்பேராநந்தமடை

ந்தார்கள் அங்குள்ளவர்கள். இது நிற்க சிவகுரு ஆரியாம்பிகையுடன் குழந்தையை எடுத்துக்கொண்டு சிவதரிசனார்த்தம் பாடலிபுரம் என்ற க்ஷேத்திரத்தைபடைந்தார். அங்கு அன்று ரதோத்ஸவமானதால் பலதேசங்களிலிருந்து வந்திருக்கும் ஜனங்களுக்கும் தான்தான் ஈசுவரன் என்பதை யறிவிக்க அக்குழந்தை ஆர்யாம்பிகையை விட்டு ரதத்தில் உத்ஸவ விக்ரஹத்தை மறைத்து அவ்விடத்தில் தான் உட்கார்ந்து கொண்டது. உடனே தாய் குழந்தையைத் தேட அர்ச்சகர்கள் உத்ஸவவிக்ரஹத்தை தேட கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தேரில் குழந்தையைப் பார்க்க உடனே குழந்தை கீழே இறங்க அங்கு உற்சவவிக்ரஹம் தென்பட எல்லோரும் என்ன ஆச்சர்யமிது என்று ஆநந்திக்க அந்தக் குழந்தை இம்மாதிரி நான் ஈசுவர ஸ்வரூபமாக இங்கு அவதரித்து இருக்க அவ்விக்ரஹத்தில் என்ன இருக்கிறது என்பதைக் காட்டினேன் என்று சொல்லிற்று. பிறகு சிவகுரு ஆர்யாம்பிகையுடன் குழந்தையுடனும் காலடிக்குச் சென்றார். இதுபோன்ற லீலைகளைச்செய்து அத்வைதாநந்தத்தைப் படித்த பண்டிதர்களுக்கும் படிக்காத பாமரர்களுக்கும் நன்கு புகட்டினர். சங்கரர் ஸர்வலோகசரண்யர் என்று முடித்தார். இல்லீலைகளின்தொடர்ச்சி மறுப்ரசங்கத்தில் வெளியாகும்.

தீ கி. ராமநாத தீக்ஷிதர்,

ஆன்ஹிக க்ரமம்.

கிராமத்திலோ அரண்யத்திலோ நின்றோ உட்கார்ந்தோ அதிகமாகவோ கொஞ்சமாகவோ அவசியம் இதைச் செய்ய வேண்டும் எனவும் வேதம் கூறுகிறது. காலை வேளை ஹோமத்திற்குப்பிறகோ மாத்யான்ஹிகத்துக்குப் பிறகோ இதைக் கட்டாயம் செய்ய வேண்டும். காயத்ரியை பாதம் பாதமாக, வியாஹ்ருதிகளுடன் முதலில் சொல்லி. பின் இரண்டு பாதங்களையும் அதற்குப் பிறகு மூன்று பாதங்களையும் சேர்த்துக் கூறி, தான் கற்ற வேதத்தில் ஒரு ப்ரச்னமோ ஒரு அநுவாகமோ ஒருமந்திரமோ சொல்ல வேண்டும். அதன் பிறகு "நமோப்ரஹ்மணே" என்ற

மந்திரத்தை மும்முறை கூறி "வ்ருஷ்டிரஸி" என்பதால் கையை அடைத்து இச்சிறு பாகத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். இதற்கு ஸமப்ரதானமான, தர்ப்பணம் ஒன்றுண்டு. அதில் தேவர்கள், ரிஷிகள் பித்ருக்கள் என மூவரும் தர்ப்பிக்கப்படுகின்றனர். பிர்மாதி தேர்வகள் ஸர்வதேவர்கள் ஸர்வ தேவகணங்கள் முறையே அவர்களது பத்னிகளும் உபவிதியாக தேவ தீர்த்தத்தாலும் க்ருஷ்ணத்வைபாயனாதி ரிஷிகள் ஸர்வ ரிஷிகள், ரிஷி கணங்கள், அவர்களதுபத்னிகள், ப்ரஜாபதி, ஸோமன், அக்னி விசுவேதேவர் என்ற காண்டரிஷிகளும் ஸாகும்ஹிதீர்தேவதோபனிஷத் யாக்ஞிகீர் வாருணீர் உபநிஷத் (இம்மூன்றும் தேவதீர்தம்) என்றவைகளும் ஹவ்பவாஹன் விச்வேதேவர் பிரும்மாஸ்வயம்பூ (அடிகளையால்) விசுவேதேவ அருணர் ஸதஸஸ்பதி ருக் யஜுஸ் ஸாம அதர்வ இதிஹாஸ புராணகல்பம் என்றவைகளுக்கு நிவீதியாகத் தர்ப்பணம் செய்யவேண்டும்

பித்ருக்கள், ஸர்வ பித்ருக்கள், ஸர்வ பித்ருகணங்கள் ஸர்வ பித்ரு பத்னிகள் என்றவர்கள் பித்ரு தீர்த்தத்தாலும் ப்ராசீனவீதியாக பூஜிக்கப்படுகின்றனர். இது நித்யகர்மாவானதால் அத்யவசியம் செய்தே தீரவேண்டும். மிக அவஸரமான காலங்களில் கூட ஒரு மந்திரத்தையாவது "அஹம் விருக்ஷஸ்ய என்று துவக்கும் ஓர் மந்திரத்தையாவது கூறி, பிரும்மயக்ஞத்தையும் தர்ப்பணத்தில் ப்ரும்மா முதலிய ஸ்தம்பம் ஈராகவுள்ள ஜகத் திருப்தியடையட்டும் என்றும் செய்து ஸங்கிரஹமாகச் செய்யலாம். இது யஜுஸ் சாகையால் ஆபஸ்தம்பர் கூறியவகை. மற்ற சூத்திரங்களில் வெவ்வேறு விதிக்கப் பட்டிருக்கிறது. அதிக சிரமமில்லாததும் அதிகப் பயனை யளிப்பதுமான இதைச்செய்வது சிரத்தையுள்ளோருக்குக் கஷ்டமாகாது. இத்தர்ப்பணம் மாத்யான்ஹிகத்திற்குப் பிறகு செய்ய வேண்டும். தேவயக்ஞம் மனுஷ்ய யக்ஞம், பூதயக்ஞம், பிரும்மயக்ஞம், பித்ருயக்ஞம் என்று ஐவகை யக்ஞங்கள் அன்றன்று அநுஷ்டிக்கத் தக்கன. அக்னியில் செய்யும் ஹோமம் தேவயக்ஞம் வேதமோதல் பிரும்மயக்ஞம் விருந்தாளிகளுக்கு அன்னமளித்தல் மனுஷ்யயக்ஞம் தர்ப்பணம் செய்தல் பித்ருயக்ஞம் காக்கைக்களிக்கும் அன்னம் பூதயக்ஞம்

ப்ரணவம் என்பதில் மூன்று அக்ஷரங்களிலிருக்கின்றன. அதில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேதத்திலிருந்து எடுக்கப்பட்டது

அதனால் ப்ரஜைகள் பூர்ணபலனையுமடைய முடியாதெனக் கருதி கருணாமூர்த்தியான கடவுள் ஒவ்வொரு பாதத்தை ஒவ்வொரு வேதத்திலிருந்து எடுத்து மூன்று பாதமுள்ள காயத்ரியை அடைந்தார். அந்த காயத்ரியை ப்ரும்மயக்ஞத்தில் சொல்வதால் மூன்று வேதத்தையும் கூறுவது போலாகும். இந்த நித்ய கர்மாவிற்குத்தான் அசுசியாயிருத்தல் இடம் அசுத்தமாயிருப்பது இவ்விரண்டே அநத்யயனமாகும். மற்ற அஷ்டமி சதுர்த்தசி தர்ச பூர்ணமாஸ ப்ரதமாதி அநத்யயந காலங்கள் இப்பிரும்மயக்ஞ வேதபாடத்திற்குக்கிடையாது. தாரணாத்யயநாதிகளுக்கே அவைகளாம். இந்த யக்ஞத்தால் உத்தம ஸ்வர்க்கத்தையும் அந்தந்த தேவர்களது ஸாலோக்யத்தையும் அடையக்கூடும். அபமிருத்யுவை ஜயிக்கலாம், கடனற்று எங்கும் செல்லலாம். எந்தெந்த யாக மந்திரங்களைப் பாராயணம் செய்கிறானோ அந்தந்தயாக பலனையும் பெறலாம். தேவபித்ருக்களுக்கு ஆஜ்யத்தாலும் மதுவாலும் ஹோமம் செய்தது போலாகும். இதிஹாஸ புராணங்களையும் உடனே படித்தல் அவசியம். இவைகளால் ஆநந்தங்கொண்ட தேவர்கள் ஆயுஸ் தேஜஸ் ஐஸ்வர்யம் யசஸ் அன்னம் புத்ரன் முதலிய செல்வங்களை யளிக்கின்றனர். இப்படி வேதம் போற்றிய பிரும்மயக்ஞம் பிரும்மசாரியாலும் செய்யத்தக்கதே. தர்ப்பணம் பேதப்படினும் மற்றது பொதுவானதேயாகும். அக்னிமீளே முதலிய நாலு வேதாரம்பமும் சொல்லுகிறோம்.

காலவிபாகமும் கர்த்தவ்யமும்.

காலை முதல் மாலை வரையிலுள்ள முப்பது நாழிகையை எட்டு விபாகமாக்கி ஒவ்வொன்றிலும் இன்னின்ன கர்மா செய்ய வேண்டுமென விதிக்கப்பட்டிருக்கிறது. அதே எட்டு முகூர்த்தங்களாகும். ஓர் முகூர்த்தம் மூன்றே முக்கால் நாழிகையானால் ஒரு பகலில் எட்டுப் பிரிவை இயற்றி கலாசாலைகளில் இந்தப் பாடத்திற்குப் பிறகு இந்தப்பாடம் என வகுத்தது போல் நமது ஜீவன காலத்தில் இதினைச் செய்து இந்த இந்த பலனைப் பெறுங்கள் என வெகு அழகாக அமைத்திருக்கிறது நமது தர்மம் இது வரைக் கீழ் சொன்ன ஸ்நாந ஸந்தியாஜப ஹோமம் பிரும்ம யக்ஞாதிகள் முதல் முகூர்த்தத்தில் முடிந்து விடும். இரண்டாம் முகூர்த்தத்தில், வித்யாபிவிருத்தி ப்ரவசனம் ஜபம். வேதார்த்த

விசாரம்பூஜைக்குவேண்டிய பத்ர புஷ்பம் கொண்டுவருதல் ஸமித் தர்ப்பை க்ரஹித்தல் முதலியவை அநுஷ்டிக்கத் தக்கனவாம். பூஜைக்கு வேண்டிய பத்ரம் புஷ்பம் தானே எடுப்பது தான் சிலாக்கியம். (தொடரும்) ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவசர்மா.

மதிப்புரை.

"நித்யோபாஸனம்"

சென்னை அமரகலாவிலாஸினி ஸபையில்ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா அவர்களால் உபன்யஸிக்கப்பட்ட விஷயங்களால் நிறைந்ததும் ஷை பண்டிதரால் அனுப்பப்பட்டதும் இப்பெயர் வாய்ந்ததுமான ஒரு புஸ்தகத்தை வரப்பெற்றோம்.

அதில் காலம்தவராமை 1. இருவகைப்பயன், 2. ஸந்தியையின் ஸ்வரூபம், 3. ஸ்நாநாசமனம், 4. அர்க்யப்ராதனம், 5. தியானம், 6. ஜபமும், ஆஸநமும், 7. பிராணாயாமம், 8. முக்கிய ஜபம், 9. முக்கிய ஆசாரங்கள் இவைபோன்ற இன்னும் பல விஷயங்களுமிருக்கின்றன? தற்காலம் வைதிககர்மாவையனுஷ்டிக்கும் பலர், அனுஷ்டிக்க வேண்டியகாலம். அனுஷ்டிக்க வேண்டிய முறை. அனுஷ்டிப்பதால் ஏற்படும் உண்மையான பயன். இவைகளை நன்கறியாமலே அனுஷ்டித்து வருகிறார்கள். அவ்விதம் அனுஷ்டிப்பவர்கள் இந்தப் புஸ்தகத்தைப் பார்த்தால் இவ்வித ஸந்தேகங்களை விலக்கிக்கொண்டு விதிப்படி அனுஷ்டித்து அதற்கேற்பட்ட முக்கியமான பயனையும் சுலபமாய் பெறலாம். அவைகளிலும் துவிஜர்களுக்கு அவச்யம் அனுஷ்டிக்கவேண்டிய ஸந்தியாவந்தன ஜபம் முதலியவைகளைப்பற்றியே நிருக்கப்பட்டிருக்கிறது. இது இக்காலத்திற்கு மிகவும் அவச்யமான புஸ்தகம்.

வேண்டுவோர்கள்:—

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா
சாந்தாச்ரமம், காந்திநகர்
154 தம்புசெட்டி வீதி, சென்னை.
என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.
இதன் விலை ரூ. 0—3—0
ஆர்யதர்மம் சந்தாநேயர்களுக்கு ரூ. 0—2—0
ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.